**செ. கு. எண்: 195** **நாள்: 12.11.2018**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 12.11.2018

மத்திய ரசாயனம் மற்றும் உரம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சரும், பெங்களூரு தெற்கு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. அனந்தகுமார் அவர்கள் உடல் நலக்குறைவால் பெங்களூரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று (12.11.2018) அதிகாலை 2 மணியளவில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

திரு. அனந்தகுமார் அவர்கள் இளம் வயதில் சமூக பணியாற்ற ஆர்வம் கொண்டு அரசியலுக்கு வந்தவர். 1996 முதல் 2014 வரை பெங்களூரு தெற்கு தொகுதியில் 6 முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற சிறப்புக்குரியவர்.

திரு. அனந்தகுமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**